**செய்தி வெளியீடு எண். 136** **நாள்: 11.03.2018**

## பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பாக இரண்டாம் சுற்று தீவிர போலியோ சொட்டுமருந்து முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்துகளை வழங்கினார்.

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பாக திருவள்ளூர் நகராட்சி அலுவலகம், திருவள்ளூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ஒண்டிகுப்பம் அங்கன்வாடி மையம் ஆகிய இடங்களில் இரண்டாம் சுற்று போலியோ சொட்டுமருந்து முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்துகளை வழங்கி முகாமினை இன்று (11.03.2018) துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்துகளை வழங்கி செய்தியாளர்களிடம் கூறியதாவது

திருவள்ளூர் மாவட்டத்தில் 11.03.2018 அன்று ஐந்து வயதிற்குட்பட்ட சுமார் 2,43,383 குழந்தைகளுக்கு 1271 நிலையான மையங்களிலும், மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் 70 மையங்களிலும் மற்றும் 43 நடமாடும் மையங்கள் மூலமாகவும் மொத்தமாக 1384 முகாம் மூலமாகவும் மற்றும் செங்கல் சூளை போன்ற தொலை தூர இடங்களிலும் முதல் சுற்று நாடு தழுவிய தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெறுகிறது. கடந்த 28.01.2018 அன்று ஐந்து வயதிற்குட்பட்ட சுமார் 2,59,312 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது. முகாமில் சுகாதாரப் பணியாளர்கள், சமூக நலத்துறைப் பணியாளர்கள், மாணவ மாணவியர்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் இந்தியன் ரெட்கிராஸ் சொஸைட்டித் உறுப்பினர்கள் என திருவள்ளூர் சுகாதார மாவட்டத்தில் 4712 நபர்களும், மற்றும் பூந்தமல்லி சுகாதார மாவட்டத்தில் 781 நபர்களும் என மொத்தம் 5493 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முகாமில் போலியோ தடுப்பு சொட்டு மருந்து பணிக்காக பிற துறையினைச் சார்ந்த 39 வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இம்முகாமினை பயன்படுத்தி அனைத்து குழந்தைகளுக்கும், போலியோ சொட்டு மருந்து அளித்து குழந்தைகளின் ஆராக்கியத்தினை பாதுகாக்க வேண்டும், இம்முகாம் சிறப்பாக நடைபெற பொது மக்கள் அனைவரும் தங்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சிகளில் இணை இயக்குநர் (மாவட்ட மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகள்) மரு. பி.வி.தயாளன், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.ஜே.பிரபாகரன் (திருவள்ளூர்), திருவள்ளூர் வருவாய் கோட்டச்சியர் திருமதி.கெ.ரா.திவ்யஸ்ரீ, திருவள்ளூர் நகராட்சி ஆணையர் திரு.செந்தில்குமரன், திருவள்ளூர் வட்டாட்சியர் திரு.தமிழ்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**